19th November 1963] [திரு. மு. சண்முகம்]

to a building', என்று விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, 'ட்ரை லாண்ட்ஸ்' என்று சேர்த்துக்கொள்வதிலே எந்த விதமான பாதகமும் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, 'வெட் ஆர் டிரை' என்பதையும் இந்த ஸப்-கிளாஸில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அர்பன் லாண்டு டாக்ஸ் அநேக நகரங்களுக்கு அமுலாக்கப்பட இருக்கிறது தெரிந்ததே. நகர்புறங்களில் உள்ள நிலங்களுக்கு இப்பொழுது நகராட்சி சட்டத்தின்கிழ் வேகண்டு லாண்டு டாக்ஸ் என்ற ஒரு வரிவிதிப்பு இருந்துகொண்டிருக்கிறது. வேகண்டு லாண்டு டாக்ஸ், அக்ரிகல்சரல் லாண்டு டாக்ஸ், ஹவுஸ் டாக்ஸ் என்ற மூன்று பிரிவுகளின் கிழ் இப்பொழுது வரி விதிப்பு இருந்துகொண்டிருக்கிறது. இந்த மசோதாவின் முக்கியமான கருத்தின்படி, வேகண்டு லாண்டு டாக்ஸ் என்று கூறி நகராட்சி மன்றங்களில் இப்பொழுது வரி விதித்துக்கொண்டிருக்கிறார்கள். வேகண்டு லாண்டு, அதாவது மனைகளுக்கு லாயக்காக உள்ள இடங்களுக்கு, அங்குள்ள மனைகளின் தற்கால விலைமதிப்பை மதிப்பிட்டு, அந்த மதிப்பீட்டின் பேரில் ஒரு பெர்ஸெண்டேஜ் போட்டு, இப்பொழுது அந்த வரியை நிர்ணயம் செய்து வசூலித்து வருகிறார்கள். இப்பொழுது அர்பன் லாண்டு டாக்ஸ் அந்த நகரங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமானால், அந்த நகர்ப்புறங்களில் புஞ்சை நிலங்களை வைத்துக்கொண்டிருக்கிறவர்கள், அதாவது வேகண்டு லாண்டாக வைத்துக்கொண்டிருப்பவர்கள் இரண்டு வரி கொடுக்கக் கூடிய நிலைமையில் அமைகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். இருந்தாலும் கூட, இன்றைய கால நிலையில் நகர்புறங்களில் இருக்கக்கூடிய மனைகள் அதிக விலையை பெறக்கூடிய நிலையில் இருந்து, அதன் மூலம் அதன் சொந்தக் காரர்கள் லாபத்தையும், பயனையும் அடையக்கூடிய நிலைமையில் இருப்பதினால், அதில் ஒரு பகுதியை அரசினருக்கு வரியாக செலுத்துவது நியாயமற்றது என்று சொல்லுவதற்கில்லை என்ற முறையில் இந்த மசோதா அமைந்திருக்கிறது. அந்த முறையில் அது ஓரளவுக்கு வரவேற்கக்கூடியது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய திருத்தத்தை இந்தச் சபை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நான் முடித்துக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 9 a.m. tomorrow. The House then adjourned. 1-10 p.m.

VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

Nil.

B. Reports, Notifications and other papers.

* 82. *The Madras Cattle-disease (Amendment) Bill*, 1963.

---

* Circulated to Members on 18th November 1963.